முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நாரதர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

26.09.2018, புதன்கிழமை

1. **யோகராசனே எங்கள் சூட்சுமமான**
   **உயர் ஞானியே அரங்கராசனே**
   **யுகமாற்றம் செய்ய வந்த குருவே**
   **உலகத்தில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குவலயத்தில் **விளம்பி தரிவை திங்கள்**
   **தெரியவே தசதிகதி புந்தி வாரம்**
   **(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 10ம் நாள் 26.09.2018, புதன்கிழமை)**
   **தெரிவிப்பேன் நாரதர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உயர்வான தானதருமமுடன்
   ஞானம் வளர்க்கின்ற அரங்கன்
   நன்னெறிகளை ஏற்று வரும் மக்கள்
4. மக்களெல்லாம் ஞானபலமுடன்
   மரணம் வெல்லும் சக்தி பெறுவர்
   தேக்கமிலா தேட்டு தனமும் வளமும்
   தேசிகன் பால் தீட்சை ஆசிபெற அடைவர்
5. அடையவே மகா குருவான
   அரங்கன் தரும வழிகள்
   சோடை போகா யோக வழியாகும்
   சுத்த நெறியோடு ஏற்று வருபவர் எல்லாம்
6. எல்லோரும் உயர்வும் சிறப்பும்
   ஏழாம் படை வீட்டு சக்திபட
   வல்லமையும் பாதுகாப்புமிக்க
   வாழ்வும் வளமும் கண்டடைவர்
7. அடையவே அரங்கன் காட்டும்
   அருள் ஞான அறம் வழி
   தடையற ஏற்றுத் தொடர
   தருமம் பெருக்க மக்களுக்கு
8. மக்களுக்கு மாற்றம் நிகழும்
   மாயை சிக்கல்கள் விலகும்
   ஊக்கமுடன் உறவினர்களிடை
   ஒத்துழைப்பு நற்குடி சிறப்பு

9. சிறப்பான இல்லறம் வம்சவிருத்தி
செயமான சூழலே உருவாகும்
மறுப்பான நிலை என்பதில்லா
மனம் போல காரிய வெற்றியும்

10. வெற்றியான வழிகளே கண்டு
வினை என்பது அண்டாத
மாற்றம் ஏற்றம் கண்டு
மக்களெல்லாம் குருவருள் வழி

11. வழிதனில் ஞானவான் ஆவர்
வருகவே தெளிவு திடம்
அழியாமைதனை பெறுவர்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் நாரதமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

யோகமெலாம் வென்று ஞானியான யோகராசனே ஞானிகள் எங்களின் சூட்சுமமான உயர் ஞானியே ஆறுமுக அரங்கமகாதேசிகனே இவ்வுலகினில் கலியுகம் மாற்றி ஞானயுகம் அமைத்திடவே யுகமாற்ற மகா ஞானியாக மெய்ஞ்ஞான குருவாக வந்துதித்த அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 10ம் நாள் 26.09.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நாரதர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நாரதமுனிவர்.

உயர்வுமிக்க தானதருமங்களுடன் ஞானத்தை தருகின்ற நன்னெறிகளை அரங்கன் கூறும் அந்த தூயநெறிமுறைகளை உளமார ஏற்றுக் கொண்டு அதன்படி நடந்து வருகின்ற மக்கள் எல்லாம் ஞான பலமுடன் மரணத்தை வெல்லுகின்ற சக்தியையும் பெற்று சிறப்படைவார்கள், தடையின்றி நல்ல வருவாயும் பொருள் சேர்க்கையும் பெறுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து அரங்கனிடத்து தீட்சை உபதேசம் பெற்றிட அவரெல்லாம் மகா குரு அரங்கன் வழிநடந்து ஆறுமுக அரங்கனின் தானதருமங்களில் பொருளுதவிகள் செய்து வர, அவர்கள் செய்யும் தர்மபலம் எல்லாம் யோக பலமாக மாறி யோகவழியாக மாறிடும். தர்மங்கள் செய்வதுடன் அரங்கனின் தூயநெறியாம் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவஉணவினை மேற்கொண்டு தினம்தினம் மறவாமல் ஞானிகளை பூஜைகள் செய்து வரவர, அவரெல்லாம் உலக மாற்றத்திற்காக உருவாக்கப்பட்ட ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் அருள் சக்தியை பெற்று உயர்வான நிலையை சிறப்புடன் அடைவார்கள். எல்லா வல்லமைகளையும் பெறுவதோடு சகலபாதுகாப்பையும் பெற்று வாழ்வும் வளமும் கண்டு சிறப்படைவார்கள்.

ஆதலினால் உலக மக்களே ஆறுமுக அரங்கன் காட்டும் அருள் ஞான அறத்தின் வழியிலே தடையின்றி பின்பற்றி செல்ல வேண்டும். தடையின்றி பின்தொடர்ந்து சென்று அரங்கன் ஆற்றும் தருமசெயலுக்கு உதவிகள் செய்து உலகமெலாம் தருமபலத்தினை பெருகிடச் செய்திட வேண்டும். இவ்விதமே உலகின் தருமபலத்தை பெருக்குகின்ற மக்களுக்கு பலவித அற்புதமான மாற்றங்கள் வாழ்வினில் உண்டாகி அவர்களைப் பற்றிய மாயையும் அதனால் வருகின்ற இடையூறுகளும்

விலகி விடுவதோடு, அவர்களும் அவர்களைச் சார்ந்த உறவினர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்று நற்குடி மேன்மையுடன் சீர்சிறப்பாய் வாழ்வர்.

அவர்களது இல்லம் சிறப்படைந்து நல்லறமாக ஆகிடும், வம்சம் விருத்தியாகும். எங்கும் எதிலும் வெற்றியே காண்பார்கள். மறுப்புகள், எதிர்ப்புகள் இல்லாத அன்பான வாழ்வை வாழ்வார்கள். அவர்கள் எண்ணியதெல்லாம் நடந்தேறும். வெற்றியான வழிகளிலே சென்று வினைக்குற்றம் ஏற்படாத வகையில் நல்ல மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் வாழ்வினில் அவர்கள் அடைந்து குருநாதர் அரங்கன் திருவடி பற்றி, திருவடி சேவையிலே திருப்தியுற்று குருவின் அன்பிற்கு பாத்திரமாக குருமுகாந்திரமாக ஞானவான்களும் ஆகிடுவார்கள். குருவழி சென்று சிறப்புற்று நாள்நாளும் தெளிவும் திடமும் அடைந்து அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வையும் பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நாரதமுனிவர்.

–சுபம்–